Scale D Tempo 122 Style Ballroom> Schlager Alp

3. கர்த்தர் என் மேய்ப்பர் ( சங் 23 )

கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கின்றார்
தாழ்ச்சி அடையேன் என்றும்
என்னைப்புல்லுள்ள இடங்களில் மேய்த்திடுவார்
அமர்ந்த தண்ணீர் அண்டை நடத்திடுவார் சங 23:1,2

பல்லவி

அல்லேலூயா நல் மேய்ப்பருக்கே
அல்லேலூயா என் மகிபருக்கே
அல்லேலூயா என் இயேசுவுக்கே
அல்லேலூயா என் பரிசுத்தர்க்கே

1

அவர் என் ஆத்துமாவை தேற்றி என்றும்
நீதியின் பாதையில் நடத்திடுவார்
நான் மரண பள்ளத்தாக்கில் நடந்திடினும்
தேவரீர் என்னுடனே இருக்கின்றீர் (சங் 23:3,4)

2

சத்துருக்கு முன்பாக எனக்கோர் பந்தி
இன்றே ஆயத்தப் படுத்தினீரே
என் தலையை எண்ணையால் அபிஷேகித்து
என் பாத்திரம் நிரம்பி வழியச்செய்தீர் (சங் 23:5)